ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023.06.15 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2023 மே

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 மேயில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றையும் தயாரித்தல் நடவடிக்கைகளில் சுருக்கமொன்றையும் எடுத்துக்காட்டின.**

தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 மேயில் குறைவான வேகத்திலேனும் வீழ்ச்சியடைந்து தயாரித்தல் நடவடிக்கைகளில் மாதத்திற்கு மாதம் சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டியது. அதற்கமைய, அனைத்து துணைச் சுட்டெண்களிலும் பதிவாகிய வீழ்ச்சிகள் மூலம் தூண்டப்பட்டு தயாரித்தல் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மேயில் 46.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.

உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் வீழ்ச்சியானது பிரதானமாக உணவு மற்றும் குடிபானத் தயாரித்தல் துறையினால் தூண்டப்பட்டிருந்தது. பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கமைய, இவ்வீழ்ச்சிக்கு பண்டிகைப் பருவகாலத்தின் பின்னர் கேள்வியில் பருவகால வீழ்ச்சியும் நுகர்வோரின் கொள்வனவு சக்தியில் சீர்குலைவும் காரணமாக அமைந்தன. மேலும், குறைவடைந்த உலகளாவிய கேள்வி அத்துடன் அதிகம் போட்டிமிக்க நாடுகளுக்கு சந்தைப் பங்கினை இழத்தல் என்பவற்றின் பிரதான காரணமாக புடைவைகள் மற்றும் ஆடைகள் துறைத் தயாரித்தலுக்கு கிடைக்கப்பெற்ற கட்டளைகள் ஏப்பிறலில் பதிவாகிய அதே குறைவான மட்டத்திலேயே காணப்பட்டன. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சிக்கு இசைவாக தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளில் இருப்பு என்பனவும் குறைவடைந்தன. இலங்கை ரூபா உயர்வடைதல் மூலம் மூலப்பொருட்கள் விலைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியினை எதிர்பார்த்து தாம் குறைந்தபட்ச மூலப்பொருள் கையிருப்பினைப் பேணியதாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, மாதகாலப்பகுதியில் குறைவான கட்டளை அளவுகள் மூலம் நிரம்பலர் விநியோக நேரம் குறுக்கமடைந்தது.

| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **34.7** | **46.2** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | | | **கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள்** |
| புதிய கட்டளைகள் | 33.0 | 48.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 24.5 | 48.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.0 | 41.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 25.3 | 43.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.5 | 48.0 | - | நீட்சியிலிருந்து குறுக்கமடைகின்றது |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

எவ்வாறிருப்பினும் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்பாட்டினை எடுத்துக்காட்டின.

**தயாரிப்பு கொ.மு.சு 46.2**

**2023 மே**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2023 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் மேயில் 49.6 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டனது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மேயில் சீனா, இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை சிங்கப்பூரில் இச்சுட்டெண் மெதுவான வேகத்தில் அதிகரித்தது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மேயில் யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 யூன் 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட சிறிதளவான வீழ்ச்சியின் பின்னர் 2023 மேயில் 53.5 சுட்டெண் பெறுமதியினை பதிவுசெய்து வளர்ச்சி எல்லைக்குத் திரும்பியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் மூலம் இது முன்னிலை வகித்திருந்தது. எவ்வாறிருப்பினும், தொழில்நிலை மற்றும் நிலுவையிலுள்ள பணிகள் என்பன மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, காப்புறுதி, தொழில்சார் பணிகள் மற்றும் போக்குவரத்து துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2023 மேயில் அதிகரித்தன.

அநேகமான துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் தூண்டப்பட்டு தொழில் நடவடிக்கைகள், 2023 மேயில் மூன்றாவது தொடர்ச்சியான மாதத்திற்கும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. அதற்கமைய, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், காப்புறுதி, தொழில்சார் பணிகள் மற்றும் மனித நலத் துணைத் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் சில மேம்பாடுகளைக் காண்பித்தன. எவ்வாறிருப்பினும், பண்டிகை பருவகாலம் முடிவுற்றமையினால் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறையுடன் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்த அதேவேளை சுற்றுலாப் பயணி வருகைகள் மிதமடைதலுக்கு மத்தியில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் துணைத் துறையுடன் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன.

மாதகாலப்பகுதியில் சில புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்ற போதும், பதவிவிலகல்கள், புலம்பெயர்வுகள் மற்றும் ஓய்வுபெறுதல் என்பவற்றின் காரணமாக தொழில்நிலை தொடர்ச்சியாக உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகளும் மாதகாலப்பகுதியில் உயர்வான வீதத்தில் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **49.6** | **53.5** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | | | |
| புதிய வியாபாரங்கள் | 47.5 | 59.3 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில் நடவடிக்கை | 51.0 | 57.4 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.5 | 36.6 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 45.7 | 42.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 61.1 | 72.1 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொள்கை வீதக் குறைப்புக்கள் மற்றும் அண்மைய ரூபா உயர்வடைதல் என்பவற்றுக்கு மத்தியில் கேள்வி நிலைமைகளில் மேம்படுதல் காரணமாக பொருளாதார நடவடிக்கை மீளுமென்ற சாதகமான எண்ணப்பாங்குகளால் தூண்டப்பட்டு அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் கணிசமான மேம்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு 53.5**
**2023 மே**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 ஏப்பிறலின் 55.4 இலிருந்து 2023 மேயில் 55.5 இற்கு உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்துகின்றது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மேயில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2023 யூன் 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.